பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4-50

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆனி மீ 20 உ வியாழக்கிழமை (04-07-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 211

# தமிழகத்திலிருந்து ஈழ அகதிகளை

# இடம் மாற்ற முயற்சி?

## மத்திய அரசை வற்புறுத்துகிறது மாநில அரசு

கொழும்பு, ஜூலை 4

"தமிழ்நாட்டில் தஞ்சம் புகுந்திருக்கும் ஈழத் தமிழ் அகதிகளினால் மாநிலம் முழுவதிலும் சட்டம், ஒழுங்கு மற்றும் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கிறது. ஆகையினால் தொடர்ந்து இந்தியாவில் தங்கியிருக்க விரும்பும் அல்லது அனுமதிக்கப்படும் ஈழ அகதிகளை முடிந்தவரை வேறு மாநிலங்களுக்கு இடம் மாற்றஞ் செய்யுங்கள்.'' — இவ்வாறு தமிழக மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்திக் கேட்டிருப்பதாகச் சென்னைச் செய்திகள் மூலம் அறியவருகிறது.

''தமிழ்நாட்டில் சீர்குலைந்து போயிருக்கும் சட்டம், ஒழுங்கு நிலையை சீர் செய்வதற்கு ஈழத் தமிழ்ப் போராளிகளின் நடவடிக்கைகளை முற்றாகச் செயல் இழக்கச் செய்யவேண்டும். தமிழகத்தில் தங்கியுள்ள ஈழ அகதிகள் யார், ஈழப் போராளிகள் யார் என்பதைப் பிரித்தறிய முடியாத நிலை இருப்பதால் போராளிகளின் நடவடிக்கைகளை முற்றாகக் கட்டுப்படுத்துவது என்பது முடியாத காரியமாக உள்ளது. —

இதேவேளை, தஞ்சம் கோரி இந்தியா வந்திருக்கும் அகதிகளை அவர்களது விருப்பத்துக்கு மாறாக அவர்கள் நாட்டுக்குத் திரும்பி அனுப்புவதும் முறையற்ற — மனிதாபிமானமற்ற — செயலாகும். —

ஆகையினால் ஈழ அகதிகளை வேறு மாநிலங்களுக்கு இடம் மாற்றி அங்கு, ஆரம்பத்திலிருந்தே அவர்களின் செயற்பாட்டைக் கண்காணித்து, அந்த மாநிலத்தில் தீவிரவாதப் போக்கு பின்பற்றப்படாமல் தடுக்கும் அதே வேளையில்,

(4 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



வெள்ளைத் தோல்காரருக்கு இப்பதான் சுட்டிருக்குது போலை......!

# தாயகம் திரும்புவதில் ஈழ அகதிகள் நாட்டம்

கொழும்பு, ஜூலை 4

தமிழகத்தில் தஞ்சம் புகுந்த ஈழ அகதிகள் பெரும் எண்ணிக்கையில் — கொழும்பு வழியாக — வடக்கு, கிழக்கு நோக்கி வந்து கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தினசரி சுமார் நூற்றியைம்பது பேர் வரை தமிழகத்திலிருந்து விமானம் மூலம் புறப்பட்டு கொழும்பு வந்து சேருகிறார்கள்.

தமிழ்நாட்டில் ஈழ அகதிகள் மீதான கெடுபிடிகள் அதிகரிப்பதை அடுத்தே, அகதி முகாம்களுக்கு வெளியே தங்கியிருக்கும் சுமார் 75 ஆயிரம் தமிழர்களில் பெரும்பான்மையானோர் தாயகம் திரும்புவதற்கு முண்டியடிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அகதிகள் தாயகம் திரும்புவதை தமிழக மாநில அரசும், சென்னையில் உள்ள ஸ்ரீலங்கா துணைத் தூதரகமும் ஊக்குவித்து வருவதாகவும் தெரிய

(4 ஆம் பக்கம் பார்க்க)

# தீர்வுக்கான புதிய திட்டம்

# அரசின் பரிசீலனையில்!

## 'புரொனட் லைன்' சஞ்சிகை தகவல்

லண்டன், ஜூலை 4

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான புதிய திட்டம் ஒன்றை ஸ்ரீலங்கா அரசு பரிசீலனை செய்து வருகிறது,

இந்தியாவிலிருந்து வெளியாகும் ''புரொன்ட் லைன்'' சஞ்சிகை இத்தகவலை வெளியிட்டிருப்பதாக பி. பி. ஸி. நேற்றிரவு அறிவித்தது.

மேற்படி சமாதானத் திட்டம் யாரால் தயாரிக்கப்பட்டது என்ற விவரத்தை அந்த சஞ்சிகை வெளியிடவில்லை. அநேகமாக அது அமைச்சர் தொண்டமானினால் தயாரிக்கப்பட்டதாக இருக்கலாம் என்றும் பி. பி. ஸியின் கொழும்புச் செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார்.

நூறு நாட்களுக்குள் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வழங்கப்படவேண்டிய அதிகாரங்கள் பற்றிப் பேசி முடிக்கப்பட்டு ஒப்பந்தம் ஒன்று எழுதப்படும் என்றும்—

அதில் ஸ்ரீலங்கா அரசும் விடுதலைப் புலிகளும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவம் இரவிரவாக சூடு!

யாழ்ப்பாணம், ஜூலை 4

ஊர்காவற்றுறை இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் இரவு 9 மணி முதல் அதிகாலை வரை சுற்றுப்புறக் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி தொடர்ச்சியான துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

(ஓ-15)

## இரு தமிழர்கள் சுட்டுக்கொலை

கொழும்பு, ஜூலை 4

திருகோணமலை மாவட்டம் — சம்பூரில் ரோந்து சென்று கொண்டிருந்த ஆயுதப் படையினர் இரண்டு தமிழர்களைச் சுட்டுக் கொன்றனர்.

(ஓ-எ)

## ஈழ அகதி விபத்தில் பலி

தென்மராட்சி, ஜூலை 4

அகதியாக இந்தியாவுக்கு சென்றவர் எனக் கருதப்படும் பெண்மணி ஒருவர் சென்னை மீனம்பாக்கத்தில் இடம் பெற்ற பஸ்விபத்தொன்றில் மரணமானார் என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் பீச் ரோட்டைச் சேர்ந்த வேலுப்பிள்ளை மனோன்மணி (வயது 65) என்பவரே கடந்த 18 ஆம் திகதி பஸ் விபத்தில் பலியானவர் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஓ-117)

## பதவியேற்பு

சென்னை, ஜூலை 4

தமிழக சட்டசபையின் புதிய சபாநாயகராக சேடப்பட்டி முத்தையா நேற்றுப் பதவி ஏற்றார்.

உபசபாநாயகராக பேராசிரியர் பொன்னுச் சாமியும் நேற்றுப் பதவிப் பொறுப்புகளை ஏற்றுக்கொண்டார்.

(உ-எ)

## மன்னாரில் 2 படையினர் பலி

யாழ்ப்பாணம், ஜூலை 4

நேற்று முன்தினம் மன்னார்த்தீவில் உள்ள ஓலைத்தொடுவாயில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்குமிடையே இடம் பெற்ற கடும் சண்டையில் இரு படையினர் கொல்லப்பட்டனர். நான்கு வேங்கைகள் வீர மரணமடைந்தனர்.

மன்னார்த் தீவில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் நேற்று முன்தினம் முற்பகல் 10. 30 மணியளவில் வெளியேறி ஓலைத்தொடுவாய் பகுதியில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

அப்போது எதிர்பாராத விதமாக விடுதலைப் புலிகள் அணியை படையினர் சந்தித்த போது கடும் மோதல் மூண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சிலமணி நேரம் தொடர்ந்து நடந்த சண்டையில் இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வலி.வடக்குவாசிகள் 22பேர் இன்று யாழ். வந்து சேருவர்

யாழ்ப்பாணம், ஜூலை 4

வலி. வடக்கில் இருந்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவால் அழைத்து வரப்படும் 22 பொது மக்களும் இன்று பிற்பகல் 2 மணிக்கு அவரவர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படுவர்.

நேற்று பருத்தித்துறையில் இருந்து கப்பலில் சென்ற செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள் பலாலியில் பேச்சுக்களை நடத்தி, கப்பல் மூலம் இவர்களை பருத்தித்துறைக்கு அழைத்து வருவர்.

அங்கிருந்து அழைத்து வரப்படுபவர்கள் யாழ். றக்கா வீதியில் உள்ள செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்தில் வைத்து உறவினர்களிடம் ஒப்படைக்கப்படுவார்கள்.

சம்பந்தப்பட்ட 22 பேரும் நோய்வாய்ப்பட்டவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஓ-3)

# ஸ்ரீலங்காவுக்கான நிதியுதவி பிரிட்டன் இடை நிறுத்தியது!

லண்டன், ஜூலை 4

ஸ்ரீலங்காவுக்கான நிதி உதவிகளை இடைநிறுத்தி வைப்பதாக பிரிட்டன் நேற்று அறிவித்தது.

லண்டனில் பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சு நேற்று வெளியிட்ட அறிக்கையில் இவ்விடயம் தெரிவிககப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்காவுக்கு வழங்கப்படவிருந்த ஒரு கோடி 30 லட்சம் பவுண் நிதி உதவியை ஸ்ரீலங்காவுக்கு புதிய தூதர் ஒருவரை நியமிக்கும்வரை பிரிட்டன் இடை நிறுத்தி வைக்க முடிவு செய்திருப்பதாக அந்த அறிக்கை மேலும் தெரிவித்தது.

ஸ்ரீலங்காவில் மனித உரிமைகள் பேணப்படுவது தொர்பான நிலையை மீளாய்வு செய்த பின்னரே, அந்த நாட்டுக்கு தொடர்ந்து நிதி உதவி அளிப்பதா என்பதை பிரிட்டிஷ் அரசு முடிவு செய்யும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்காவின் [illegible] காரத்தில் [illegible] என்ற குற்றச்சாட்டின் மீது ஸ்ரீலங்காவிற்கான பிரிட்டிஷ் தூதர் டேவிட் கிளாட்ஸ்ரோனை ஸ்ரீலங்கா அரசு வெளியேற்றியது தெரிந்ததே.

அதற்குப் பதில் நடவடிக்கையாகவே நிதி உதவி வழங்குவதை பிரிட்டன் இடை [illegible]தாக அறிவித்

([illegible] பக்கம் பார்க்க)

## பிரி. தூதர் வெளியேற்றம்; அர்த்தமற்ற ஒரு செயல்!

### பிரதமர் மேஜர் கண்டனம்

லண்டன், ஜூலை 4

பிரிட்டிஷ் தூதர் திரு. கிளாட்ஸ்ரோன் வெளியேற்றப்பட்டது - ஒருதலைப் பட்சமானதும், அர்த்தமற்றதுமாகும் என்று பிரிட்டிஷ் பிரதமர் ஜான் மேஜர் ஸ்ரீலங்கா ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் வெளிப்படையாக குறிப்பிட்டுள்ளர் என்று பி. பி. ஸி தெரிவித்தது.

ஸ்ரீலங்காவின் உள் நாட்டு அரசியலில்திரு.கிளாட்ஸ்ரோனின் தலையீடு பற்றிய குற்றச்சாட்டு ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

பிரிட்டனில் உள்ள ஸ்ரீலங்காத் தூதுவரை திருப்பி

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## யந்திரம்

செவ்வாய் தோஷமுள்ளவர்களுக்கு ஆடி மாதத்தில் ஜெபிக்க வேண்டிய மங்கள சண்டி யந்திரம் விவாகத் தடையை நீக்கி இல்வாழ்வைத் தரும். சாதகத்துடன் ஜூலை 10ஆம் திகதிக்கு முன் வரவும். விவாகம் நடைபெறா விட்டால் பணம் திரும்பப் பெற உத்தரவாதம். ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம், 146, பருத்தித்துறை வீதி, நல்லூர். (17352)

## நாற்று விற்பனைக்கு

நல்ல இன பம்பாய் வெங்காய நாற்று விற்பனைக்கு உண்டு. தொடர்பு: க. மயில்வாகனம், அந்தரான் வாய்க்கால், சித்தன்கேணி. (4185)

## தேவை

'கோடை' நாடகத்தில் நடிப்பதற்கு நடிக, நடிகையர்கள் தேவை. ஆர்வமுள்ள கலைஞர்கள் 7-7-1991 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு நேரில் வரவும். பட்டப்படிப்புகள் கல்லூரி, 57/48, ஸ்ரான்லி வீதி, [இலங்கை வங்கி முன்பாக] யாழ்ப்பாணம். (17386)

## மில்க்வைற் சலவைத் தூள்

சிக்கனமான சலவை சிறப்பாக வெளுக்கிறது. 50கிறாம் பைக்கெட் ரூபா 6/- மட்டுமே. 100 வெற்றுப் பைக்கெட்டுகளை அனுப்பி அழகிய கைலேஞ்சியை அன்பளிப்பாகப் பெறுங்கள். மில்க்வைற், யாழ்ப்பாணம். (சி/0212)

# ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 04 - 12 - 1918

உதிர்வு: 14 - 07 - 1990

திதி: 04 - 07 - 1991

## திரு. நாகநாதர் செல்வத்துரை

(முன்னாள் மலாயன் கார்ட்வெயார்ஸ் கணக்குப்பிள்ளை)

பாசமிகு ஐயாவே! எம்மை பண்புடனும், பாசத்துடனும் அரவணைத்து வழி நடத்தி எம்மை ஆறாத் துயரில் மூழ்க விட்டு சென்று ஆண்டு ஒன்று ஆனாலும் எங்கள் அனைவரது நெஞ்சினுள்ளும் உங்கள் அன்பு நினைவுகள் என்றென்றும் எம்மை விட்டு அகலா.

உங்கள் பிரிவால் வாடும்;
**அன்பு மனைவி, மக்கள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

''புஸ்பா வாசம்''
நாமகள் லேன், கொக்குவில். (17141)

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 15 03 1915

மறைவு: 13 07 1990

திதி: 04 07 1991

அமரர்

## சண்முகம்பிள்ளை நடனசிகாமணி

[முன்னாள் வல்வைப் பட்டினசபைத் தலைவர்]

வந்தனை செய்துனைப் போற்றுவோம் ஐயா
வல்வையின் பட்டினத் தலைவராய் அன்று
சிந்தனை செய்தனை நல்லதும் செய்தனை
சீரிய மக்களைப் பெற்றனை சென்றனை
அந்தமும் ஆதியும் இல்லா இறைவன்
ஆடிய பாதம் புகுந்தனை யின்றோ
எந்தனை ஆண்டிடும் எம்மவர் குருவே
ஏற்றி ஏற்றித் தொழுவோ முனையே

எங்கள் குலதெய்வம் ஓராண்டு பூர்த்தியடையும் இந்நாளில், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**மனைவி, மக்கள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

தெணியம்பைத் தெரு,
வல்வெட்டித்துறை. [17377]

# திருமண அறிவித்தல்

ஆனைக்கோட்டை
திரு. திருமதி குமரேசன் அவர்களின்
ஏக புத்திரி திருநிறை செல்வி

★ **பிரியதர்சினிக்கும்** ★

வெள்ளவத்தை
திரு. திருமதி துரைராஜா அவர்களின்
புத்திரன் திருவளர் செல்வன்

★ **யதூஷன்** ★

அவர்களுக்கும் திருமணம் கனடாவில் 22 - 06 - 1991 இல் நடைபெற்றது என்பதை உறவினர்கள், நண்பர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தகவல்:
**திருமதி குமரேசன்.**

''நாமகள் வாசம்''
ஆனைக்கோட்டை. [சி-0217]

உ
ஓம்

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

திருவருளை முன்னிட்டு நிகழும் பிரசோற்பத்தி வருடம் ஆனி மாதம் 20 ஆம் நாள் ( 04 - 07 - 1991) வியாழக்கிழமை பகல் 11 மணி 03 நிமிஷம் முதல் 12 மணி 50 நிமிஷம் வரையும் உள்ள கன்னி லக்கின சுபமுகூர்த்த சுபவேளையில்,

| | |
|---|---|
| எனது | எங்கள் |
| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| **சிறிகாந்தன்** | **வத்சல்யா** |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

குணசிங்கபுரம் பிரதீபா மண்டபத்தில் திருவருள் துணையால் நிகழவிருக்கும் திருமண வைபவத்திற்கு வருகை தந்து புதுமணத் தம்பதிகளை வாழ்த்தி அவர்களுடன் விருந்து போசனத்தில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி செ. முருகேசு,
வரவேற்பாளர்
திரு. திருமதி மனோரஞ்சன்,
85/5, பிக்கறிங்ஸ் வீதி,
கொழும்பு - 13.

திரு. திருமதி
சி. இராசரத்தினம்,
39,10-வது ஒழுங்கை,
கொழும்பு - 3
[4187]

வெளிவந்து - விற்பனையாகின்றன

# ஆங்கில உதவி ஆசிரியர்

போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டி

# ENGLISH TEACHERS EXAM GUIDE


(நடைபெற்ற 5 வருட மாதிரி வினா - விடைகளுடன் 15 கட்டுரைகளும், கடிதங்களும்)

அஸ்ரன் வெளியீடு - விலை 79/-

(எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்)

[சி-0195]

# ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 29 - 11 - 1937

மறைவு: 15 - 07 - 1990

அமரர்

## நாகலிங்கம் ஞானவடிவேல்

ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவலைகள் ஓயாது.

உங்கள் பிரிவால் வாடும்;
**மனைவி, மக்கள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

புங்குடுதீவு - 11. (17140)

# தனியார் கல்வி நிறுவன ஒன்றிய விசேட பொதுக்கூட்டம்

இடம்: யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபம்

காலம்: 5-7-1991 வெள்ளி காலை 9 00 மணி

நிகழ்ச்சி நிரல்:

★ யாப்பை அங்கீகரித்தல்
★ செயலாளர் அறிக்கை
★ பொருளாளர் அறிக்கை
★ வி. பு. ம. மு. உறுப்பினர்களின் சிறப்புரை

முக்கிய விடயங்கள் அறிவிக்கப்பட இருப்பதனால் வடமராட்சி, தென்மராட்சி, யாழ்ப்பாணம், பண்டத்தரிப்பு, மருதனார்மடம், தீவகம், காரைநகர் ஆகிய கோட்ட சகல பொதுச்சபை அங்கத்தவர்களையும் வருகை தருமாறு அழைக்கின்றோம்.

பொதுச்செயலாளர்,
யாழ். மாவட்டம்.

(17384)

# மரண அறிவித்தல்கள்

திருமதி

## புளோரன்ஸ் அருந்தவமலர்

சுன்னாகம் சூராவத்தையைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர் லோறன்ஸ் அரியநாயகத்தின் அன்பு மனைவி புளோரன்ஸ் அருந்தவமலர் காலமாகிவிட்டார்.

அன்னார் அன்ரன் [பிரான்ஸ்], அமலா, பாலன், போல் [குஞ்சு, பிரான்ஸ்], சாந்தா [கொழும்பு], வசந்தா, மரியா, இதயா ஆகியோரின் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று 04-07-1991 காலை10-00 மணிக்கு நடைபெறும்.

தகவல்:
**பிள்ளைகள்**

''அன்ன வாசம்''
சூராவத்தை, சுன்னாகம். [17387]

## நாகலிங்கம் இரத்தினலிங்கம்

[இளைப்பாறிய P. W. D. ஓவசியர்]

அளவெட்டியைச் சேர்ந்த நாகலிங்கம் இரத்தினலிங்கம் பிரான்சில் காலமானார். அன்னார் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், இரத்தினகுமாரி, இரத்தினாம்பிகை, இரத்தினமாலா, இரத்தினவதனி, இரத்தினமலர், இரத்தினராணி, இரத்தினரூபி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவலிங்கராசா, பரமேஸ்வரன், சிறீகாந்தா, லிங்கநாதன், ரஞ்சித், விக்கினராசா, சண்முகலிங்கராசா ஆகியோரின் மாமனாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 02-07-91 செவ்வாய்க்கிழமை பிரான்சில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

லிங்கவாசா,
அளவெட்டி
[4188]

தகவல்;
**சு. லிங்கநாதன்**
[மருமகன்]

## அ. சுவாம்பிள்ளை

அ. சுவாம்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியர்) காலமானார். அன்னார் காலஞ்சென்ற அந்தோனியாபிள்ளை, றெஜினா ஆகியோரின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிறில் சுவாம்பிள்ளை, திருமதி சறோஜினி நிக்கலஸ் (கனடா), மேன்மைதகு திருகோணமலை, மட்டுநகர் ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி கயித்தாம்பிள்ளை, திரு. அ. ஞானப்பிரகாசம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். அன்னாரின் ஈமக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

25, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
**அ. ஞானப்பிரகாசம்**

(17144)

## C. C. சோமசேகரம் J. P. U. M.

(Retd. Crown Proctor, Jaffna)

யாழ்ப்பாணம் நாவலர் வீதியைச் சேர்ந்த திரு. C. C. சோமசேகரம் J. P. U. M. அவர்கள் நேற்று இறைவனடி சேர்ந்தார்.

இவர் திருமதி இராசம்மா அவர்களின் அன்புக் கணவரும, Dr. சண்முகலிங்கம், திருமதி ம. சோமாவதி, காலஞ்சென்ற திருமதி S. சோமா இந்திராணி ஆகியோரின் அருமைத் தந்தையும் Dr. C. மகேந்திரன், திரு. D சண்முகமூர்த்தி, திருமதி ச. சோமகலாவல்லி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற C. C சபாரத்தினம், காலஞ்சென்ற C. C. முத்துக்குமாரசாமி, Prof. C C. பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் நேற்று நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

180 A, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்;
**Dr. S. சண்முகலிங்கம்**

(17145)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### ஸ்ரீலங்கா பக்கம் அமெரிக்கா!

சிலாபத்தில் ரணவில என்ற இடத்தில் "வொய்ஸ் ஒப் அமெரிக்கா" வானொலியின் ஒலிபரப்பு நிலையம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு ஸ்ரீலங்கா அரசு கடந்த வருடத்திலேயே அனுமதி வழங்கி விட்டது.

இவ்விடயம் குறித்து இந்தியா இப்போதுதான் ஆட்சேபம் தெரிவித்திருக்கிறது. உத்தேச ஒலிபரப்பு நிலையம் அதிசக்தி வாய்ந்த தொடர்பு சாதனங்களுடன் நிர்மாணிக்கப்பட உள்ளதால், அதன் மூலம் இராணுவ இரகசியங்களை அனுப்பக்கூடிய சாத்தியம் உண்டு என்பது இந்தியாவின் நிலைப்பாடு.

ஆனால் ஸ்ரீலங்காவோ, அமெரிக்க ஒலிபரப்பு நிலையம் சாதாரண வானொலி நிகழ்ச்சிகளை ஒலிபரப்புவதற்கு மட்டுமே பயன்படுத்தப்படும் என்று தனது நிலைப்பாட்டைச் சரிப்படுத்த முயற்சிக்கிறது; வக்காலத்து வாங்குகிறது. சோழியன் குடுமி சும்மா ஆடுமா?

பிலிப்பீன்ஸில் இருந்த அமெரிக்க இராணுவத்தளம் பாதிக்கப்பட்ட நிலையில், இந்து சமுத்திரப் பகுதியில் ஓர் இராணுவத் தொலைத் தொடர்பு நிலையம் அவசியம் தேவைப்படுகிறது. எனவே அமெரிக்காவுக்கு இது மிக அவசரமான விடயம்.

இந்த அவசர நேரத்தில் கைகொடுக்கும் ஸ்ரீலங்காவுக்கு, அதிக புள்ளியிட்டு, அதற்கு உத்தியோகபூர்வமாகவும் வெளிப்படையாகவும் அதிக அளவில் உதவுவதற்கு அமெரிக்கா முன்வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை! அதற்கான முயற்சிகள், ஆதரவு திரட்டுதல்கள் ஏற்கனவே ஆரம்பமாகிவிட்டன!!

அமெரிக்க காங்கிரஸின் தென்னாசிய விவகாரங்கள் நிபுணர் ஸ்டீபன் சோலர்ஸ் போன்றோரின் மனித உரிமை மீறலை அடிப்படையாகக் கொண்ட கண்டனத்தைப் பெரிதாகப் பொருட்படுத்தக் கூடாது. ஸ்ரீலங்காவின் இராணுவப் பயிற்சிக்கு இப்போது வழங்கப்படும் தொகையை — ஒரு லட்சத்து 60 ஆயிரம் டாலர்களை — 4 லட்சமாக உயர்த்த வேண்டும். இவ்வாறு புஷ் நிர்வாகத்துக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருக்கிறது.

கடந்த ஜூன் மாதத்தின் பின்னர் ஸ்ரீலங்கா பொருளாதாரத்துறையில் எடுத்துவரும் சீர்திருத்தங்களை [தனியார் மயப்படுத்தல்] அமெரிக்க அரசு வெளிப்படையாகப் பாராட்ட வேண்டும். திறந்த சந்தைப் பொருளாதாரத்தை கடைப்பிடிக்கும் மாதிரி நாடாக அணிசேரா இயக்கத்திற்குள் ஸ்ரீலங்காவே விளங்குகிறது.

ஆகையால் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற சர்வதேச நிறுவனங்களின் மாநாடுகளிலும் ஏனைய சர்வதேச மாநாடுகளிலும் அமெரிக்கா ஸ்ரீலங்காவை வெளிப்படையாகப் பாராட்ட வேண்டும். இவ்வாறெல்லாம் ஸ்ரீலங்காவுக்கு ஆதரவு திரட்டப்படுகிறது.

ஆகையால், ஒன்றைக் கொடுத்து ஒன்பதைப் பெற உதவும் அமெரிக்க வானொலி நிலைய விவகாரத்தில், ஸ்ரீலங்கா இந்தியாவுக்கு விட்டுக் கொடுக்கும் என்று எப்படி எதிர்பார்ப்பது?

அமெரிக்கா, தென் ஆசியா சம்பந்தப்பட்ட தனது கொள்கைகளையும், போக்குகளையும் இந்தியாவை மையமாக வைத்தே உருவாக்குகிறது என்பது உண்மை. ஆனால் இந்தியாவுக்கு "டோஸ்" கொடுப்பதற்காக, ஸ்ரீலங்காவை அந்த மட்டத்திற்கு [போட்டியாக] வளர்க்க முனைந்தாலும் வியப்படைய ஒன்றுமில்லை!

# சுமுகமான தீர்வு ஒன்றுக்கு சுவீடன் தொடர்ந்து தூண்டும்

யாழ்ப்பாணம், ஜூலை 4
இலங்கையில் தமிழர் பிரச்சினைக்கு ஒரு சுமுகமான அமைதித் தீர்வு ஏற்பட சுவீடன் அரசு சம்பந்தப்பட்ட சகல தரப்பினரையும் தூண்டும். அத்துடன் இலங்கையில் நிகழும் சம்பவங்களைத் தொடர்ந்தும் உன்னிப்பாகக் கவனித்து வரும்.

இலங்கை அரசுப் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற பல சந்திப்புக்களின் போது இலங்கையின் இனப் பிரச்சினை தொடர்பாகவும் அங்கு நிலவும் வன்முறைச் சூழ்நிலை குறித்தும் சுவீடன் அவர்களின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளதுடன், தனது ஆழ்ந்த கவலையையும் தெரிவித்துள்ளது.

எனவே அமைதித் தீர்வுக்கான சாத்தியக் கூறுகள் தென்படும் பட்சத்தில் பேச்சுவார்த்தைக்கான நடவடிக்கைகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதே சுவீடனின் விருப்பமாகும்.

சுவீடிஷ் பிரதமரின் செயலாளர், அரசின் நிலைப்பாடு தொடர்பாக மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வலிகாமம் சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. எஸ். சிறீபாஸ்கரன் எழுதிய கடிதம் ஒன்றுக்கான பதிலிலேயே மேற்கண்ட விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. [த]

### உ. அ. அதிபர் பிரிவுகளிடையே தட, கள போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 4
யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையிலான தட, கள (மெய்வல்லுனர்) போட்டி எதிர்வரும் 6ஆம் திகதி சனிக்கிழமையும், 7ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமையும் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 1-30 மணிக்கு நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட ஆணையாளருமாகிய திரு. கா. மாணிக்கவாசகர் கலந்து கொள்வார்.

யாழ். உதவி அரசாங்க அதிபர் திரு. செ. இ. நித்தியராஜ் தலைமையில் நடைபெறவிருக்கும் இந்தப் போட்டிகளில் சிறப்பு விருந்தினர்களாக யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திரு. க. சண்முகநாதன், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை சட்டக்கல்வி விரிவுரையாளர் திரு. ச. பதுகுலசிங்கம் ஆகியோர் கலந்து கொள்வார்கள். (இ-100)

### பொதுமக்கள்

## பாதுகாப்பை உறுதி செய்ய புதிய திணைக்களம்

பொதுமக்கள் பாதுகாப்புச் சம்பந்தமான விடயங்களை நிர்வகிக்கவும், தனியார் பாதுகாப்பு சேவை நிலையங்களை மேற்பார்வை செய்யவும் புதிய திணைக்களம் ஒன்று உருவாக்கப்படவுள்ளது.

கொழும்பில் மூத்த பாதுகாப்பு அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலகத்துடன் இணைந்து செயற்பட உள்ள இந்த திணைக்களத்தில் நாடு முழுவதிலும் இயங்கும் சகல தனியார் பாதுகாப்பு சேவை நிலையங்களும் பதிவு செய்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படவுள்ளது.

இந்த நிலையங்களில் கடமைபுரியும் ஊழியர்கள் அனைவருக்கும் இராணுவப் பயிற்சி அளிக்கப்படும். புதிய சீருடைகளும், புதிய அடையாள அட்டைகளும் அவர்களுக்கு வழங்கப்படும், நெருக்கடி காலங்களில் பாதுகாப்புப் படையினருக்கு உதவியாக இவர்களும் கடமையில் ஈடுபடுத்தப்படுவர்.

நாடு முழுவதும் உள்ள தனியார் பாதுகாப்பு சேவை நிலையங்களில் 40,000 க்கும் மேற்பட்டோர் பணிபுரிகின்றனர். (த)

## செய்முறைப் பரீட்சையை நடத்தக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 4
கடந்த 1989 ஆம் ஆண்டுக்குரிய ஜி. சி. ஈ. சாதாரண தரப் பரீட்சைகளில் இதுவரை நடத்தப்படாத சங்கீதம், நடனம், மனையியல் ஆகிய பாடங்களுக்கான செயன்முறைப் பரீட்சைகளை எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்திற்கு முன்னராக நடத்தி முடிக்குமாறு யாழ். கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் பரீட்சை ஆணையாளரைக் கேட்டுள்ளார்.

1989 ஆம் ஆண்டு ஜி சீ. ஈ. சாதாரணதர பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு செயன்முறைப் பரீட்சைகள் இதுவரை நடத்தப்படாததனால் தொடர்ந்து உயர்தர வகுப்பில் சேர்வதில் தடங்கல் ஏற்பட்டிருப்பது தெரிந்ததே. (ஒ-5)

### இசைப் போட்டியில் முதலாம் இடம்

யாழ்ப்பாணம், ஜூலை 4
யாழ். கோட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற முதலாம் பிரிவு இசைத் தனிப் போட்டியில் நல்லூர் புனித சென் பெனடிக்ற்கல்லூரி மாணவி செல்வி சசிரேகா கோபாலகிருஷ்ணன் முதலாம் இடத்தைப் பெற்றார். (த)

### புங்குடுதீவு அந்தோனியார் திருவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 4
புங்குடுதீவு அருள்மிகு அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா நாளை 5-ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

6 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 5-30 மணிக்கு திருப்பலிப்பூசை நற்கருணைப் பவனியும் —

7 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9-00 மணிக்கு தேர்ப்பவனியும் இடம் பெறும். [இ]

### கருத்தரங்கு

வட பிரதேசத்தின் நிர்வாக மையத்துக்கான இடவமைவுத் தெரிவு சம்பந்தமான கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் சனிக்கிழமை 13 ஆம் திகதி காலை 9-00 மணி தொடக்கம் மாலை 5-30 மணிவரை யாழ் பல்கலைக்கழக புவியியற்றுறை விரிவுரை மண்டபத்தில் நடைபெறும். (த)

## குளங்கள் புனரமைப்பு

யாழ். மாவட்டத்தில் தூர்ந்துபோயுள்ள குளங்களைப் புனரமைக்கும் முயற்சியில் தமிழீழ விடுதலைப் புலிகள் ஈடுபட்டுள்ளனர்.

இதன் முன்னோடியாகக் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள குளங்கள் கணக்கெடுக்கப்படுகின்றன.

மழை காலத்தில் குளங்களில் தண்ணீரைத் தேக்கி விவசாயத்துக்குப் பயன்படுத்துவதே குளங்கள் புனரமைக்கப்படும் நோக்கம் ஆகும். (இ-154)

## உலகச் செய்திகள்

### சோவியத்தில் நெருக்கடி

மாஸ்கோ, ஜூலை 4
சோவியத் யூனியனில் ஆளும் கட்சியான கம்யூனிஸ்ட் கட்சிக்கு மாற்றாக ஒரு ஜனநாயகக் கட்சியைத் தோற்றுவிக்க முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதில் முன்னாள் சோவியத் வெளியுறவு அமைச்சர் எட்வேட் செவனாட்ஸே தீவிரமாக ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

திரு செவனாட்ஸே சர்ச்சைக்குரியதான ஜோர்ஜியா குடியரசைப் பிரதிநிதித்துவம் செய்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

### ஆஸாத் காஷ்மீர் தேர்தல்

லாகூர், ஜூலை 4
பாகிஸ்தானின் கட்டுப்பாட்டிலுள்ள ஆஸாத் காஷ்மீரின் சட்டசபைக்கான தேர்தல் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

மொத்தம் உள்ள 40 இடங்களில் 34 இடங்களை பாகிஸ்தானின் ஆளும் கட்சியான முஸ்லிம் மாநாட்டுக் கட்சி வென்றது ஆஸாத் காஷ்மீரில் தற்போது ஆட்சியிலுள்ள பெனாஸிர் பூட்டோவின் பாகிஸ்தான் மக்கள் கட்சி 2 தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற்றது. (இ)

### முழு அளவில் யுத்தம்

பெல்கிறேட், ஜூலை 4
யூகோஸ்லேவியா சமஷ்டி அரசுப்படைகளுக்கும் ஸ்லோவேனியா மாநிலக் குடியரசுப் படைகளுக்கும் இடையே முழு அளவிலான யுத்தம் நடந்து வருவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

### இந்திய நாணய மதிப்பு குறைப்பு

புதுடில்லி, ஜூலை 4
இந்தியா தனது நாணயத்தின் பெறுமதியை எட்டு சதவீதத்தினால் குறைத்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் உத்தரவுக்கு இணங்கியே அரசு நாணய மதிப்பை குறைத்ததாக எதிர்க்கட்சிகள் அரசைக் குற்றம்சாட்டி உள்ளன.

ஆனால் இந்திய நாணயப் பெறுமதி பல காலமாக வெளிநாட்டு நாணயங்களுடன் சீராகச் சமன் செய்யப்படவில்லை என்றும் இப்போது அது சீராக்கப்பட்டுள்ளது என்றும் நிதியமைச்சர் மன்மோகன் சிங் கூறியுள்ளார். (இ)

# தட, கள விளையாட்டு விழா ஒழுங்கு விதிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 4
விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் நடத்த ஏற்பாடு செய்துள்ள தியாகி திலீபன் ஞாபகார்த்த வெற்றிக்கேடயத்துக்கான தட, கள விளையாட்டு விழா பற்றிய ஒழுங்கு விதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

வட்டவை மட்டத்திலும் தொடர்ந்து மாவட்ட மட்டத்திலும் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

வட்டவை மட்டத்தில் நடைபெறவுள்ள போட்டிகளுக்கு விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் 10-ஆம் திகதி ஆகும்.

போட்டிகள் [illegible] ஏனைய ஒழுங்கு விதிகள் வருமாறு:

★ போட்டிகள் அனைத்தும் வட்டவை மட்டத்தில் அடுத்த மாதம் [ஆகஸ்ட்] 10ஆம் திகதிக்கு முன்பாக நடத்தி முடிக்கப்பட வேண்டும்.

★ மாவட்ட மட்டத்தில் நடத்தப்படும் போட்டிகளுக்குத் தகுதி பெற்ற விண்ணப்பங்களை மாவட்ட விளையாட்டுக் குழுவிடம் ஒப்படைக்க வேண்டிய கடைசி நாள் ஆகஸ்ட் 15 ஆம் திகதி ஆகும்.

★ மாவட்ட மட்டப் போட்டிகள் அனைத்தும் [illegible] திலீபன் உண்ணாவிரதம் தொடங்கிய கால எல்லைக்கு முன்பாக நடத்தி முடிக்கப்படும்.

★ வட்ட அவை மட்டப் போட்டிகளில் 1ஆம், 2ஆம், 3ஆம் இடங்களைப் பெறும் போட்டியாளர்களுக்கு முறையே 5, 3, 1 எனப் புள்ளிகள் வழங்கப்படும்.

★ அதிக புள்ளிகளைப் பெறும் வீரருக்கு— வீராங்கனைக்கு 'தனிநபர் வெற்றியாளர் கிண்ணம்' வழங்கப்படும்.

★ போட்டிகளில் ஆண் நிகழ்ச்சிகளில் சிறந்த வட்ட அவை, பெண் நிகழ்ச்சிகளில் சிறந்த வட்டஅவை மாவட்ட மட்டத்தில் சிறந்த வட்ட அவை என்ற தெரிவு இடம் பெறும்.

★ தட நிகழ்ச்சிகளிலும், கள நிகழ்ச்சிகளிலும் தனித் தனியே சிறந்த ஆண், பெண் மெய்வல்லுநர்கள் தெரிவு செய்யப்படுவர்.

★ மாவட்டமட்ட போட்டிகளின் போது ஒவ்வொரு வட்ட அவையும் ஒவ்வொரு அஞ்சல் ஓட்டக் குழுக்களை தயார்ப்படுத்தி வைத்திருக்க வேண்டும்.

வட்ட அவை மட்டத்திலான போட்டியாளர்கள் கொண்டிருக்க வேண்டிய தகைமைகள் வருமாறு:

★ வட்டவைக்குள் வசிக்கும் நிரந்தர வதிவிடக்காரர்கள் தத்தமது வட்ட அவையை மட்டுமே பிரதிநிதித்துவப்படுத்த முடியும்.

★ ஒருவர் ஒரு வட்டவையையே பிரதிநிதித்துவப் படுத்த முடியும்.

★ வெளி மாவட்டங்களைச் சேர்ந்தோர் தற்போது வசித்து வரும் தற்காலிக வதிவிட வட்டவையையே பிரதிநிதித்துவப்படுத்தல் வேண்டும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக கரையோர பகுதிக்கு மேலும் படைப் பிரிவுகள்!

சென்னை, ஜூலை 4
தமிழ்நாடு கடற்கரைப் பகுதியில் பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்காக மேலும் பல மத்திய பாதுகாப்புப் படைப் பிரிவுகள் தமிழகத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

மத்திய உள்துறை அமைச்சுச் செயலாளர் ஆர். கே. பார்கவா தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவிடம் இவ்வாறு உறுதியளித்திருக்கிறார். செல்வி ஜெயலலிதாவே செய்தியாளர்களிடம் இத்தகவலை வெளியிட்டார். அவர் மேலும் கூறியதாவது:-

தமிழகத்தில் அகதி முகாம்களுக்கு வெளியே வாழும் ஈழத்தமிழர்கள் எதிர்வரும் சனிக்கிழமைக்குள் தங்களை அருகில் உள்ள பொலீஸ் நிலையங்களில் பதிவு செய்யத் தவறினால் அவர்களை நாட்டைவிட்டு வெளியேற்றுவதா என்பது பற்றி மத்திய அரசுடன் மாநில அரசு ஆலோசனை நடத்திய பின்னரே முடிவு எடுக்கப்படும்.

இத்தகைய தமிழர்களைத் திருப்பி அனுப்புவது என்பது மத்திய அரசு முடிவு செய்ய வேண்டிய விடயம் ஆகும்.

முகாம்களுக்கு வெளியே சுமார் 50 ஆயிரம் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர். ஆனால் கடந்த செவ்வாய் வரை 5 ஆயிரத்துக்கும் குறைவானவர்களே தம்மைப் பதிவு செய்துள்ளனர்.

தமிழக அரசு தனது உத்தரவு தொடர்பாக தொடர்ந்தும் நடவடிக்கை எடுக்கும். அதுபற்றி பின்னர் அறிவிக்கப்படும் —இப்படி செல்வி ஜெயலலிதா மேலும் சொன்னார். (உ-எ)

## விளையாட்டு போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 4
பண்டத்தரிப்பு கோட்டத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கு இடையேயான மெய்வல்லுநர் போட்டிகள் இன்றும் நாளையும் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கின்றன.

பண்டத்தரிப்பு உதவி கல்விப்பணிப்பளார் திரு. ப சண்முகராசா தலைமையில் நடைபெறும் இப் போட்டிகளுக்கு வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. கே. சந்திரராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஒ)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 4
யாழ்ப்பாணம், நல்லூர், சங்கானை, தெல்லிப்பளை, உடுவில், சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள — இடம் பெயர்ந்தோர் முகாம்களின்-பிரதிநிதிகள் தமது குறைபாடுகள் தொடர்பாக ஆராய்வவற்கான கூட்டமொன்று நாளை (வெள்ளி) கொக்குவில் தமிழர் புனர்வாழ்வுக் கழக அலுவலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சகல முகாம்களில் இருந்தும் இவ்விரு பிரதிநிகளை கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஒ)

## புதிய பல்கலை. மாணவருக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 4
யாழ். பல்கலைக்கழகத்துக்கு 90-91 ஆம் ஆண்டு அனுமதி பெற்ற மாணவர்கள் அனைவரும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் தமக்குக் கிடைக்கப் பெற்ற அனுமதிக் கடிதங்களுடன் நாளை (வெள்ளி) காலை 9 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரியில் கூடுமாறு யாழ் கல்வி அலுவலகம் கேட்டுள்ளது.

மாணவருக்கான கெல்ட் (GELT) ஆங்கிலப் பாடநெறி தொடர்பாக கலந்துரையாடல் ஒன்று அங்கு நடைபெறவுள்ளது. (ஒ-5)

## இன்றைய கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 4
''வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மக்களின் உள்—வெளி இடம்பெயர்வும், விளைவுகளும்'' என்ற தலைப்பிலான கருத்தரங்கு இன்று வியாழன் மாலை 3.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக புவியியல் விரிவுரை மண்டபத்தில் இடம்பெறும்.

புவியியற் கழகத்தின் தற்போதைய கருத்தரங்குத் தொடரில் ஐந்தாவதாக நடைபெறும் இக் கருத்தரங்கில் புவியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. கா. குகபாலன் உரையாற்றுவார். [இ]

## பரமேஸ்வரத்தில்

யாழ்ப்பாணம், ஜூலை 4
யாழ்ப்பாணம் பல்கலைக்கழக, பரமேஸ்வரன் ஆலயத்தில் வாராந்த வெள்ளிக்கிழமை கலை நிகழ்ச்சியில், நாளை 5 ஆம் திகதி பிற்பகல் 4-30 மணிக்கு இசை மணி செல்வி சாரதா சச்சிதானந்தத்தின் இன்னிசைக் கச்சேரி இடம்பெறும். (அ)

## ஸ்ரீலங்கா...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளது என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லண்டனிலுள்ள பிரிட்டிஷ் வெளியுறவு அலுவலகத்துக்கு ஸ்ரீலங்காவுக்கான தூதுவர் ஜெனரல் டி. சேபால ஆட்டிகல அழைக்கப்பட்டு, அவரிடம் தூதுவர் கிளாட்ஸ்ரோன் வெளியேற்றப்பட்ட உத்தரவினால் ஏற்பட்டுள்ள விளைவுகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

பிரிட்டிஷ் வெளியுறவு அலுவலக உதவி அமைச்சர் மார்கிரட் போய் விளைவுகளையும் பிரிட்டிஷ் அரசு எடுத்துள்ள தீர்மானங்களையும் தூதர் ஆட்டிகலவிடம் விரிவாக விளக்கிக் கூறினார்.

திரு. ஆட்டிகலவிடம் தெரிவித்த முக்கிய விடயங்கள் வருமாறு:-

★ ஸ்ரீலங்காவுக்கான இராணுவ தளபாட விற்பனை கொள்கையில் புதிய கட்டுப்பாடு விதித்தல்.

★ பிரிட்டனில் இருந்து எதுவித நல்லெண்ண தூதுக்குழுவும் ஸ்ரீலங்காவுக்கு செல்லாது. அவற்றில் பிரிட்டிஷ் கடற்படையும், கலை, கலாசாரப் பரிவர்த்தனைக் குழுக்களும் அடங்கும். [உ-எ-5]

## தமிழகத்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழகத்தில் ஈழப் போராளிகளின் போக்கை முற்றாக ஒடுக்க வேண்டும்.'' — இவ்வாறு புதிய தமிழக அரசு மத்திய அரசுக்கு வலியுறுத்திக் கூறியிருப்பதாக சென்னைத் தகவல்கள் மூலம் தெரியவருகிறது.

### ஒரே மொழி பேசுவதால்......

''அகதிகளும் மாநில மக்களும் ஒரே மொழி, பழக்க வழக்கங்கள், தோற்றங்களைக் கொண்டவர்களாக இருப்பதும்—

ஈழ அகதிகள் தமிழக மக்களுடன் பின்னிப் பிணைந்து ஒன்றுபட்டு வாழ்வதும்—இரு தரப்பாரையுமே வேறுபடுத்தி விசாரிப்பதைச் சிக்கல்படுத்தியுள்ளது; ஈழ அகதிகள் தமிழ் நாட்டில் தமிழக மக்கள் போலவே நடமாடக் கூடியதாக இருப்பது, குற்றச் செயல்களைப் புரிந்து விட்டு அவர்கள் தப்பிச் செல்ல வாய்ப்பாக இருக்கிறது.

எனவே—

ஈழ அகதிகளை வேறு மாநிலத்துக்கு மாற்றுவதன் மூலமே இந்தச் சிக்கலைத் தீர்க்க முடியும்'' — என்றும் தமிழக அரசு சுட்டிக்காட்டியுள்ளது.

இதனிடையில்—

ஏற்கனவே அகதி முகாம்களில் இருக்கும் ஈழத் தமிழ் அகதிகள் தமிழகப் பொலீஸாரின் பலத்த கெடுபிடிக்கு மத்தியில் [illegible] பதாகத் தெரியவருகிறது. (உ-3)

## இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 4
நாடக அரங்கக் கல்லூரியினரின் 'உயிர்த்த மனிதர் கூத்து' நாடகம் இன்று பிற்பகல் 4 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் மேடையேறுகின்றது.

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தினரின் ஆதரவில் மேடையேறும் இந்நாடகத்திற்கான அனுமதிச் சீட்டுக்களை ரூபா 10 அன்பளிப்புச் செலுத்தி மண்டப வாயிலில் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## தாயகம்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வருகிறது.

படகுகள் மூலம் தமிழகம் வந்தடைந்த அகதிகள் படகுகளில் தாயகம் திரும்ப அனுமதிக்கப்படவில்லை. தாயகம் திரும்ப விரும்புவோர் விமானம் மூலம் மட்டுமே திரும்பலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பாஸ்போர்ட் இன்றி படகுகளில் தமிழகம் வந்த அகதிகள் ஸ்ரீலங்கா திரும்புவதற்கு சென்னையில் உள்ள ஸ்ரீலங்கா துணைத் தூதரகம் துரிதகதியில் பாஸ்போர்ட்டுகளை வழங்குகிறது.

அகதி பதிவு அட்டையும், இந்தியப் பணத்தில் 24 ரூபாவும் வழங்கும் அகதிகளுக்கு தற்காலிக பாஸ்போர்ட்டுகள் உடனடியாக வழங்கப்படுகின்றன.

இவ்வாறு பாஸ்போர்ட் பெற்றவர்கள், விமான டிக்கெட் பெறவும், சென்னை விமான நிலையம் ஊடாக கொழும்பு திரும்பவும் பாஸ்போர்ட்டில் இந்தியா விஸா குத்தியாக வேண்டும்.

தங்கியிருந்த காலப்பகுதிக்கான இந்திய விஸா பெறுவதற்காக சென்னை நுங்கம் பாக்கத்தில் உள்ள இந்தியகுடியகல்வு, குடிவரவு பணிமனையில் தினசரி ஆயிரக்கணக்கான ஈழத்தமிழர்கள் கூடுவதர்கவும் தெரிவிக்கபபடுகிறது.

ஈழ அகதி ஒருவர் தாம் தங்கியிருககும் பிரதேச பொலீஸ் நிலையத்தால் வழங்கப்படும் அறிக்கை, அகதிகள் ஆணையாளரால் வழங்கப்படும் கடிதம், மாவட்ட ஆணையாளரால் [கலெக்டரால்] வழங்கப்படும் அகதிகள் அட்டை ஆகியவற்றைச் சமர்ப்பித்து விஸா பெறலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பாஸ்போர்ட், விஸா பெறவும், விமானக் டிக்கெட் பதிவு செய்யவும் ஈழ அகதிகள் முண்டியடிப்பதை அடுத்து கப்பல் முலம் அகதிகளைக் கொழும்புக்கு அனுப்புவது பற்றி சென்னையில் அதிகாரிகள் மட்டத்தில்ஆராயப்பட்டு வருவதாக அறியவருகிறது.

தற்சமயம் விமான சேவை மூலம்150 பயணிகளே சென்னையிலிருந்து கொழும்புக்கு தினசரி வரக்கூடியதாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

## கடத்தப்பட்டவர் விடுவிப்பு

காஷ்மீர் தீவிரவாதிகள் தாம் கடத்தி வைத்திருந்த இஸ்ரவேலியப் பிரசையை நேற்று விடுவித்தனர்.

## மன்னாரில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகள் தரப்பில் கப்டன் பரிது அல்லது அலஸ் ன்று எஅழைக்கப்படும் வி. அல்பிறட்(மன்னார்) இரண்டாம் லெப்டினட் காளி (அ. புவிராசசிங்கம்—மட்டக்களப்பு), பரமேஸ் (க. உதயகுமார்—பூநகரி), வதனன் (தா. ஜேம்ஸ் பீரிஸ் — வங்காலை) ஆகியோர் வீரமரணமடைந்தனர். (கு-5)

## தீர்வுக்கான...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கையொப்பம் இடவேண்டும் என்றும் சமாதானத் திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேச்சுவார்த்தைகள் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே நேரடியாக நடைபெறவேண்டும் என்ற முக்கிய கருத்தும் அதில் இடம்பெற்றுள்ளது.

இது பேச்சுவார்த்தைகளில் ஏனைய தமிழ்க் குழுக்கள் பங்குகொள்ளக்கூடாது என்ற புலிகளின் நிபந்தனையை ஏற்பதாகவே உள்ளது என்றும்—

இதேவேளை—

''அரசியல் குறிக்கோள்களை அடைவதற்கு வன்முறை வழிகளை நாடமாட்டோம்'' என புலிகள் தாமாகவே அறிவிக்க வேண்டும் என்ற நிபந்தனை புதிய திட்டத்தில் காணப்படுவதாகவும் பி. பி. ஸி. குறிப்பிட்டது.

புதிய திட்டத்தில் வழங்கப்படவுள்ள அதிகாரப் பகிர்வு 1987 ஆம் ஆண்டு இந்திய — இலங்கை ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட மாகாணசபைக்கான அதிகாரங்களை விட சற்று அதிகமாக உள்ளது.

இதே சமயம் கூட்டாட்சி அமைப்பு முறை பற்றி புதிய திட்டத்தில் எதுவும் கூறப்படவில்லை.

புதிய அமைதித்திட்டத்தை ஜனாதிபதி பிரேமதாச பெரிதும் வரவேற்பதாக ''புரொன்ட் லைன்'' கட்டுரை தெரிவிக்கிறது.

ராஜீவ் காந்தி கொலையால் தற்போது தோன்றியுள்ள உணர்ச்சிக் கொந்தளிப்பு அடங்கிய பின்னர், ஸ்ரீலங்கா அரசு முன்வைக்கக் கூடும் என எதிர்பார்க்கப்படும் எத்தகைய அமைதித் திட்டத்துக்கும் இந்தத் திட்டமே அடிப்படையாக அமையும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-5)

## பிரி. தூதர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அழைக்குமாறு தாம்ஸ்ரீலங்கா அரசைக் கேட்டுக் கொள்ளப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

மனித உரிமை மீறல்கள் தொடர்பான தகவல்களை சேகரிக்கும் மைய நிலையமாக பிரிட்டன் இருப்பதால் ஸ்ரீலங்காவில் பிரிட்டிஷ் தூதுவர் ஒருவர் இருப்பது மிக அவசியம் என எமது அரசு கருதுகிறது. அதனால் ஸ்ரீலங்காவுக்கான புதிய பிரிட்டிஷ் தூதுவர் ஒருவரை எமது அரசு விரைவில நியமிக்கும்— என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ஒ-6)


## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

யாழ்ப்பாணக் கிளை.

பிரிவுக் குழுவுக்கான செயற்பாட்டுக் **கருத்தரங்கு**

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக் குழுவுக்கான செயற்பாட்டுக் கருத்தரங்கு 07 - 07 - 91 க்கு (முற்பகல் 10 மணிக்கு) எமது காரியாலபத்தில் நடைபெறும். பிரிவுக் குழு உறுப்பினர்கள் தவறாது சமுகம் தரவும்.

செயலாளர்,
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ்ப்பாணம்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம். [சி 0215]

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

முல்லைத்திவுக் கிளை.

## நிர்வாக உதவியாளர்/ கணக்காளர்

மேற்படி வெற்றிடத்துக்கு தகைமையுள்ளோரிடமிருந்து மனுக்கள் கோரப்படுகின்றன. 15-07-1991 க்கு முன் அனுப்பி வைக்கவும். முல்லைத்திவு மாவட்டத்தில் வசிபபவர்கள் விரும்பத்தக்து.

கௌரவ செயலாளர்.

புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு. [சி-0216]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 4 - 07 - 1991 இல் [illegible] வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org